IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.74/2024**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ஏழுமலை | | : | |
| Father's/Husband's Name<br>தந்தை/கணவர் பெயர் | : | பெருமாள் | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | நடுபட்டு | | : | |
| Taluk/தாலுக்கா | : | சேத்பட் | Age/வயது | : | 65 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 29th day of January 2026.

**முதல் விசாரணை**

நான் நடுப்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 26.07.1982 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையபத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 19.05.2005 தேதியிட்ட தாவா A ஷெட்யூல் சொத்திற்கான வாதி பெயரில் உள்ள கிரையபத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 26.03.2012 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வசம் வாதி கிரையம் பெற்ற B ஷெட்யூல் சொத்திற்கான கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. தாவா A ஷெட்யூல் சொத்திற்கு செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை –4 **வா.சா.ஆ.4** ஆகும்.

5. தாவா A ஷெட்யூல் சொத்தில் உள்ள வாதி பெயரில் உள்ள மின் கட்டண அட்டை. மின் கட்டணம் செலுத்திய ரசீதுகள் எண்ணிக்கை–4. **வா.சா.ஆ.5** ஆகும்.

6. தாவா B ஷெட்யூல் சொத்தில் சாமிகண்ணு பெயரில் உள்ள மின் கட்டண அட்டை மற்றும் மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை –2. **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா A ஷெட்யூல் சொத்தில் மற்றொரு வீட்டிற்கான வரி ரசீதுகள் எண்ணிக்கை–4 **வா.சா.ஆ.7** ஆகும்.

8. தாவா சொத்திற்கு வாதி பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 317. **வா.சா.ஆ.8** ஆகும்.

9. 10.09.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதி வாதிக்கு சொந்தமான காலி மனையை கூடுதல் விஸ்தீரணம் போட்டு ஏற்படுத்தி கொண்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல். **வா.சா.ஆ.9** ஆகும்.

10. 25.05.2017 தேதியிட்ட வட்டாட்சியரிடம் அளித்த புகார் மற்றும் அதன் ரசீது **வா.சா.ஆ.10** ஆகும்.

11.02.05.2017 தேதியன்று வாதி முதலமைச்சர் தனி பிரிவுக்கு அனுப்பிய புகார் நகல் மற்றும் அதன் ரசீது **வா.சா.ஆ.11** ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.01.29 04:33:47 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி